Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

| ஈழநாடு சந்தா விபரம். இந்தியா — இலங்கை | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 1 -00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி: என் 49

மலர் 6 யாழ்ப்பாணம் சோபகிருது பங்குனி 19 ஆம் நாள் துல்கஃதா 17 (1 4 64) புதன்கிழமை இதழ் 51


# கூட்டு அரசாங்கம்: இடதுசாரி ஆதரவில்லை?

## மத்தியஇணைப்புக் கமிட்டி கூட்டத்தில் முடிவில்லை

கொழும்பு, செவ்வாய்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் சேர்ந்து கூட்டு அரசாங்கம் அமைக்கும் யோசனைக்கு இடதுசாரி ஐக்கிய முன்னணியின் மத்திய இணைப்புக் கமிட்டியின் கூட்டத்தில் ஆதரவு கிடைக்கவில்லையென அறியப்படுகிறது. இணைப்புக் கமிட்டியின் கூட்டம் நேற்றிரவு பொரளையிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிக்காரியாலயத்தில் நடைபெற்றது. இடதுசாரி ஐக்கியமுன்னணியின் கொள்கைத் திட்டங்களை அடிப்படையாகக் கொண்ட பொது வேலைத் திட்டத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஏற்றுக் கொள்ளாத வரை கூட்டு அரசாங்க யோசனைக்கு இடமில்லையென இணைப்புக் கமிட்டி கருத்துத் தெரிவித்ததாக அறியப்படுகிறது.

இணைப்புக் கமிட்டிக்கூட்டத்தில் லங்கா சமசமாஜக்கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா, கம்யூனிஸ்ட்கட்சித் தலைவர் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா, எம். ஈ. பி. தலைவர் திரு. பிலிப் குணவர்த்தன ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அரசாங்கத்துடன் கூட்டுச் சேரும் யோசனையை சமசமாஜக் கட்சியின் ஒருபிரிவினர் கடுமையாக எதிர்ப்பதால் விரைவில் கட்சியின் பொதுக் கூட்டமொன்றைக் கூட்டி விவாதிப்பதென கட்சித் தலைமைப்பீடம் முடிவுசெய்துள்ளதாக அறியப்படுகிறது.

மகாஜன எக்ஸத் பெரமுனையிலும் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

## கூப்பன் ஒன்றுக்கு $2\frac{1}{2}$ அவுன்ஸ் சர்க்கரை

### வருகிற திங்கட்கிழமைமுதல் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், புதன்

எதிர்வரும் புதுவருடத்தை முன்னிட்டு வருகிற திங்கட்கிழமை 6-ம் திகதி முதல் அரிசிக் கூப்பன் ஒன்றுக்கு இரண்டரை அவுன்ஸ் சர்க்கரை வீதம் வழங்கப்படும் என உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. சிவப்பிரகாசம் அறிவித்திருக்கிறார்.

ஒரு ருத்தல் சர்க்கரையின் விலை 54 சதமாகும்.

எல்லாக் கூப்பன் கடைகளிலும் சர்க்கரையைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் இதற்காக தனிப்பட்ட பர்மிட்டுகள் வழங்கப்பட மாட்டாது என்றும் அவர் மேலும் கூறினர்.

அடுத்த வாரம் முதல், கூப்பனுக்கு பர்மா பச்சை அரிசி வழங்கப்படுமென்றும், கடந்த சில வாரங்களாக வழங்கப்பட்ட பழைய பச்சை அரிசியின் கையிருப்பு தீர்ந்துவிட்டதால் பர்மாவிலிருந்து கிடைத்துள்ள பச்சை அரிசி வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். இன்னும் சில வாரங்களுக்குப் பின் மில்சாட் அரிசி விநியோகிக்கப்படும் என எதிர்பார்ப்பதாயும் அவர் கூறினர்.

மயக்கமானவருக்கு

## நான்கு மணித்தியாலமாக சிகிச்சையளிக்கப்படவில்லை

### யாழ். ஆஸ்பத்திரி சம்பவம்பற்றி அசைஸ் நீதிமன்றத்தில் பிரஸ்தாபம்

யாழ்ப்பாணம், புதன்

பொலிஸ் வாக்குமூலத்தில் [illegible]ன் கூறியது உண்மையாக [illegible]ருந்தால், இங்கு கூறியது [illegible]ண்மையல்லவென்றும், இங்கு கூறியது உண்மையாக இருந்தால், பொலிஸ் வாக்குமூலத்தில் தான் கூறியது உண்மையல்லவென்றும், [illegible]ரணி கொலை முயற்சி வழக்கில் சாட்சியமளித்த வயிரமுத்து கூறினர்.

இவ்வழக்கு, மூன்ருவது தினமாக தொடர்ந்து நீதியரசர் டாக்டர் ஏச். டபிள்யூ. தம்பையா கியூ ஸி. முன்னிலையில் நேற்றுக் காலை விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டபோது, நேற்று முன்தினம் விசாரணையின் போது சாட்சி கூண்டில் மயங்கி விழுந்த வயிரமுத்து, கதிரையில் இருந்து சாட்சியமளிக்க அனுமதிக்கப்பட்டார்.

வயிரமுத்து அவசர சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் காலை 10 மணிக்கு அனுமதிக்கப்பட்டு மாலை 3 மணிக்கே டாக்டரால் பரிசோதனை செய்யப்பட்டார் என்ற விஷயம் நேற்றைய விசாரணையின் போது தெரியவந்தது.

மயக்கமடைந்த வயிரமுத்து சாட்சியமளிக்கத் தகுதியுடையவரா? என்ற விஷயத்தைத் முடிக்குரிய வழக்கறிஞர் நீதியரசரின் கவனத்துக்குக் கொண்டுவந்ததை தொடர்ந்து இதுசம்பந்தமாக டாக்டர் சண்முகநாதன், டாக்டர் ஆனந்தராசா, டாக்டர் குகநாததாசன் பிஸ்கால் பியோன் டேவிட் ஆகியோர் சாட்சியமளித்தார்கள்.

பிஸ்கால் பியோன் சாட்சியமளிக்கும்போது மயக்கமடைந்த வயிரமுத்து காலை 10-50 மணிக்கு யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாக கூறினர்.

டாக்டர் குகநாததாசன் சாட்சியமளிக்கும்போது தான் பரிசோதனை செய்தசமயம் மயக்கமடைந்த வயிரமுத்துவின் நாடிஓட்டம் குறைவாக இருந்ததாகவும் ஜுரத்திற்கான அறிகுறி காணப்பட்டதாகவும் கூறினர்.

டாக்டர் சண்முகராசா சாட்சியமளிக்கும்போது கூறியதாவது: மயக்கமடைந்தவரை நான் மாலை 3 மணிக்கு பரிசோதனை செய்தேன், அவரின் நிலைமை சரியாக இருந்தது. எனது கடமை நேரம் காலை

(6-ம் பக்கம் பார்க்க)

## தலாய்லாமா இலங்கை வருவார்?

புதுடில்லி, மார்ச் 31

தலாய்லாமா இவ்வாண்டு பிற்பகுதியில் அண்டையிலுள்ள சில பௌத்த நாடுகளுக்கு விஜயம் செய்வார் என இந்திய வெளிநாட்டு அதிகாரி ஒருவர் கூறினர்.

## தென்னை மரத்தில் திருவடிவம்

யாழ்ப்பாணம், புதன்

நடராஜப்பெருமானின் நடனத் தோற்றத்தைப் போன்ற உருவ அமைப்பு ஆனைப்பந்திக்கு அருகேயுள்ள ஒருவரது வளவில் நிற்கும் தென்னை மரத்தில் தோற்றப்படுவதாக பல்லாயிரக் கணக்கானோர் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

இந்த இடத்தில் சிலர் கற்பூரம் கொழுத்தி வழிபட்டனர் சிலர் பொங்கி வழிபாடு செய்தனர்.

## பிற்போக்கு சக்திகளை முறியடிக்கமட்டும் ஒத்துழைப்பு

### இடதுசாரி ஐக்கிய முன்னணி மத்திய கமிட்டி அறிக்கை

கொழும்பு, செவ்.

'இடதுசாரி ஐக்கிய முன்னணியினரால் வகுக்கப்பட்டுள்ள வழியைப் பின்பற்றுவதாலேயே தற்போது எழுந்துள்ள அரசியல் நிலைக்கு நல்ல தீர்வு காணமுடியும் என்றும் ஜனநாயகத்தைப் பாதுகாக்க முயற்சி செய்கின்றேரும் என்ற போர்வையில் யு. என். பி. யினர் ஆட்சி பீடத்தில் அமர முயற்சிக்கிறார்கள் இதுவிஷயத்தில் மககள் ஏமாந்துவிடக்கூடாது என்றும் தற்போது எழுந்துள்ள அரசியல் சூழ்நிலை பற்றி ஆராய்ந்த இடதுசாரி ஐக்கிய முன்னணியின் மத்திய இணைப்புச் கமிட்டி அறிக்கை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

இப்போதுள்ள இந்த நெருக்கடியான சூழ்நிலையில் ஸ்ரீ லங்கா சுதந்திக்கட்சியிலுள்ள இடதுசாரி முற்போக்கு சக்திகள் யு.என்.பி. யினரின் பிற்போக்கு சக்திகளை தடுக்க முயற்சி மேற்கொள்வதோடு இடதுசாரிகள் சார்புள்ள தீர்வுகாண நடவடிக்கை எடுக்கவேண்டும். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலுள்ள இடதுசாரிச் சக்திகளுடன் இந்த நோக்கத்துக்கா[illegible] ஒத்துழைக்க இடதுசாரி ஐக்கியமுன்னணி தயா

(6-ம் பக்கம் பார்க்க)

## ஷேக் அப்துல்லா விடுதலை?

ஸ்ரீநகர், மார்ச் 31

சிறை வைக்கப்பட்டிருக்கும் முன்னாள் காஷ்மீர் பிரதமர் ஷேக் அப்துல்லாவை விடுதலைசெய்வதென தமது அரசாங்கம் தீர்மானித்திருப்பதாய் காஷ்மீர் பிரதமர் திரு. சாதிக் இன்று அறிவித்தார். காஷ்மீரில் இப்பொழுது அமைதி நிலவுவதாகவும் ஷேக் அப்துல்லா மீதுள்ள வழக்கில் அரசியல் அம்சங்களைக் கருத்தில்கொண்டு அவரை விடுதலைசெய்ப முடிவு செய்துள்ளதாகவும் திரு. சாதிக் தெரிவித்தார். விடுதலைசெய்யும் திகதி பற்றி இன்னும் முடிவுசெய்யப்படவில்லை.

## 300 பேர் வசிக்கும் இடத்தில் ஓரேயொரு கிணறு!

நல்லூர், புதன்

சுமார் 300 சிறுபான்மைத் தமிழர்கள் வாழும் பகுதியில் ஒரு கிணறும் ஒரு குளமும் மட்டுமே இருப்பதனல், அப்பகுதி மக்கள் பெரிதும் கஷ்டத்திற்குள்ளாகியிருக்கிறார்கள்.

கரவெட்டி மேற்குமத்தொனி வட்டாரத்தில் வாழும் சுமார் 300 சிறுபான்மைத் தமிழ் மக்கள் குடிப்பதற்கும், குளிப்பதற்கும் நீர்வசதியில்லாமல் கஷ்டப்படுவது மேலதிகாரிகளின்

(5-ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

நமது அன்றாட வாழ்விலே பாவம் என்பது ஒருவித சக்தியாகும். அதைச் சமாளிக்க மற்றொரு சக்தியால்தான் முடியுமென்பதை நாம் நன்கு உணர்ந்திருக்க வேண்டும்.

— ஹென்றி டிரம்மாண்ட்


# ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சோபகிருது ஆண்டு
பங்குனி மீ 19 உ (1-4-64)


## இந்தியா - பாகிஸ்தான் பேச்சு

இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் வகுப்பு ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான வழிவகைகளை ஆராயும்பொருட்டு இருநாடுகளின் உள்நாட்டுமந்திரிகளும் இம்மாதம் மூன்றாந்திகதி சந்தித்துப் பேசவிருக்கின்றனர். இதை இந்திய பாகிஸ்தான் மக்கள் மட்டுமன்றி மனிதாபிமானமுள்ள சகலரும் மகிழ்ச்சியுடன் வரவேற்பர்,

காஷ்மீரில் திருட்டுப்போன புனிதகேசம் மீட்கப்பட்டுவிட்டபின்னரும் அதனால் எழுந்த வகுப்புக்கலகத் தீ காஷ்மீரிலிருந்து பாகிஸ்தானில் பரவி அதன் எதிரொலி வட இந்திய ராஜ்யங்களிலும் காணக்கூடியதாக இருந்தது. இதன் விளைவாக இருநாடுகளிலுமுள்ள சிறுபான்மையினரின் உயிருக்கும் உடைமைக்கும் ஆபத்து ஏற்பட்டது. லட்சத்துக்கு மேற்பட்ட சிறுபான்மையினர் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு அகதிகளாக வந்து சேர்ந்துள்ளனர். இந்தியாவிலிருந்தும் பாகிஸ்தானுக்குள் சிறுபான்மையினர் போய்ச் சேர்ந்துள்ளனர். ஆரம்பத்திலேயே இதைப்பற்றி முயற்சி எடுத்திருக்க வேண்டும். அப்படிச் செய்திருப்பின் இவ்வளவு கஷ்டநஷ்டங்கள் ஏற்படாமல் தடுத்திருக்கலாம். காலதாமதமாகவாவது இந்த முயற்சியை மேற்கொண்டது இந்தத் தீ பரவாமல் தடுக்க உதவ வேண்டும்.

இருநாடுகளுக்கிடையிலும் வேறுபல பிரச்னைகள் இருக்கலாம். என்றாலும் சிறுபான்மையோர் பிரச்னை மனிதர் சம்பந்தப்பட்ட பிரச்னையாகும். இருநாடுகளிலும் அடிக்கடி இதுபோன்ற சச்சரவுகள் ஏற்படுவது சகஜமாக இருப்பினும் இம்முறை இவ்வளவு மோசமான சம்பவங்கள் ஏற்பட்டதற்கான அடிப்படைக் காரணத்தை இருநாட்டு மந்திரிகளும் ஆராய வேண்டியதும் இனியும் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் தடுப்பதற்கான வழிவகைகளைக் காண வேண்டியதும் அவசியமாகும்.

இந்திய, பாகிஸ்தான் சச்சரவுகள் எல்லாவற்றுக்கும் காஷ்மீர் முக்கிய பிரச்னைதான் காரணமாக இருக்கிறதென்றும் சொல்லப்படுகின்றது. இந்தப் பிரச்சினைக்குத்தகுந்த முறையில் தீர்வு காண்பதற்கு வேறு உரிய வழிவகைகளை இருநாட்டுத் தலைவர்களும் மேற்கொள்ளட்டும். ஆனால் சிறுபான்மையினரை இனம், மதம் ஆகிய காரணங்களால் இம்சைக்குள்ளாக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியது இரு அரசாங்கங்களினதும் மேலான கடமையாகும். காஷ்மீரில் சிறை வைக்கப்பட்டுள்ள ஷேக் அப்துல்லா விரைவில் விடுதலை செய்யப்படக் கூடுமெனக் கூறப்படுகிறது. அவரை விடுதலை செய்வது காஷ்மீரில் அமைதிநிலவவழிவகுக்குமென நம்பலாம்.

கடந்த சில வருடங்களில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் மந்திரிகள் கட்டத்தில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றிருக்கின்றன. துரதிருஷ்டவசமாக இப்பேச்சுவார்த்தைகள் எதிர்பார்த்த அளவுக்கு வெற்றி பெறவில்லை. இம்முறை நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தைகள் இருநாடுகளிலுமுள்ள மக்களையும் அவர்களின் எதிர்கால வாழ்வையும் பொறுத்தது. இதில் இருதரப்பினரும் பிடிவாதம் காட்டுவதற்கு எதுவுமில்லை. வகுப்பு ஒற்றுமைக்கான வழிவகைகளை ஆராய்ந்து இருமந்திரிகளும் ஒரு உடன்பாட்டுக்கு வருவார்களென நம்புவோம். உடன்பாடு ஏற்பட்டால் மட்டும் போதாது. அதை இருதரப்பினரும் செயல்படுத்த வேண்டியது அவசியம்.

1950-ம் ஆண்டில் செய்யப்பட்ட நேரு-லியாகத் உடன்படிக்கையில் இருநாடுகளிலுமுள்ள சிறுபான்மையினரின் பாதுகாப்புக்கும் உரிமைக்கும் உத்தரவாதமளிக்கப்பட்டது. ஆனால் அந்த உடன்படிக்கை சரியான முறையில் செயல்படுத்தப்படவில்லை. மனிதாபிமானத்தையும் இருநாடுகளின் மேலான நன்மையையும் முன்னிட்டு இவ்வித கண்ணராவி மீண்டும் ஏற்படாமல் இருதேச மந்திரிகளும் தக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இன்றேல் வினோபாபாவே கூறியதுபோல் இருநாடுகளும் பெற்ற சுதந்திரம் பறிபோய்விடக் கூடும்.

# விஞ்ஞான மாணவர்களுக்கு சிமெந்து தொழிற்சாலையில் பயிற்சி

## கல்வி இலாகாவுடன் எஸ். ஜே. வி. ஆலோசனை செய்வார்

நல்லூர், புதன்

காங்கேசன் துறைத் தொகுதியிலுள்ள கல்லூரிகளில் விஞ்ஞானக்கல்வி பெறும் மாணவர்களுக்கு, சிமிந்திதொழிற்சாலையில் பயிற்சியளிக்க நடவடிக்கை எடுக்கும்படி திரு எஸ். ஜே. வி. செல்வநாயகத்திடம் தமிழரசுக்கட்சியின் காங்கேசன் துறை கிளைத் தலைவர் திரு. ஏ. தெட்சணாமூர்த்தி கேட்டுள்ளார்.

காங்கேசன் துறை நடேஸ்வராக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, யூனியன் கல்லூரிகளில் உயர்வகுப்புகளில விஞ்ஞானம் பயிலும் மாணவர்களுக்கு எதிர்காலத்தில் தொழில்துறைகளில் ஈடுபடக்கூடியதாகப் பயிற்சியளிக்கும் வகையில் காங்கேசன் துறை சிமிந்தித் தொழிற்சாலையில் பயிற்சியளிக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென திரு. செல்வநாயகத்திடம் கேட்கப்பட்டுள்ளது.

இக்கோரிக்கைக்குப் பதிலளிக்கையில் திரு. செல்வநாயகம் கல்வி இலாகா அதிகாரிகளுடன் இதுவிஷயமாக ஆலோசனை நடத்துவதாகத் தெரிவித்தார். கல்வியமைச்சர் மாணவர்களுக்கு தொழில் துறைகளில் வேலைவாய்ப்பளிக்க விசாரணைச் சபை ஒன்றினை அமைத்துள்ளதனால் அச்சபையினரின் கவனத்திற்கு இந்த யோசனையைச் சமர்ப்பிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

காங்கேசன் துறை சிமிந்தித் தொழிற்சாலையில் தற்போது வேலைசெய்யும் தினச் சம்பளத் தொழிலாளர்கள் 300 பேர்களில் 150 பேர் எஸ். எஸ். ஸி. படித்தவர்களாக இருக்கையில் தொழிற்சாலையில் பல வேலைகளிலும் பயிற்சிபெற 33 தென்னிலங்கை இளைஞர்களுக்குச் சந்தர்ப்பமளித்துள்ளதாகவும் திரு. செல்வநாயகத்திடம் முறையிடப்பட்டுள்ளது இப்பயிற்சி பெறும் சந்தர்ப்பத்தை இங்கு வேலைசெய்யும் படித்த வாலிபர்களுக்கு அளிக்க நடவடிக்கையெடுக்கும்படியும் கேட்கப்பட்டுள்ளது.

சிமிந்திக் கூட்டுத்தாபனத் தலைவரிடம் இதுசம்பந்தமாகப் பூர்வாங்க பேச்சு நடத்தும்படி திரு. செல்வநாயகம் கிளைத் தலைவர் திரு. தெட்சணாமூர்த்தியிடம் தெரிவித்துள்ளார்.

சிமிந்தித் தொழிற்சாலையில் நடைபெறும் சிங்கள வகுப்பை ரத்துச்செய்ய நடவடிக்கை எடுக்கும்படி காங்கேசன் துறை பட்டின சபைத் தலைவர் திரு. எம். திடவீரசிங்கம் திரு. செல்வநாயகத்திற்கு தந்தியொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

# களத்துமேடு

— கலப்பை —

எங்கள் வயல்வெளிகள், புரட்டாசி மாதம் தொடக்கம் மாசிமாதம் வரையும் பாடுபட்டு நெற்கதிர்களை ஈன்று கொடுத்தன. இனிபாவம் அதுகள் கொஞ்சநாட்களுக்கு-அதாவது அடுத்த புரட்டாசி வரை - ஓய்வெடுத்து ஆறுதலாயிருக்கசிடும் என்று விட்டுவிட்டோம். எவ்வளவு தயாள குணம்.

முந்தின காலங்களில் அரிவிவெட்டு, சூட்டுமிதி முடிந்த அடுத்த நாளே சிறுதானியம் விதைத்துவிடுவோம். இப்போ நாங்கள் அந்த வழக்கத்தை விட்டுவிட்டோம். ஆறுமாதங்களுக்கு வயல்கள் அனாதைக் குழந்தைகள் போல ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டே இருக்கும். அவற்றை நாம் துன்புறுத்த விரும்புவதில்லை.

எள்ளும் பயறும், சணலும் சோளமும், குரக்கனும் சாமையும் - ஒரு காலத்தில் எங்கள் வயல்களை பச்சைவளங்களாக்கிப் பரிமளிப்பு தந்தன. இந்த இளவேனிற்காலத்தில் அவை காற்றில் அசைந்தாடிக் கொண்டிருப்பதைப் பார்த்தாலே பசி தீரும். இவை தவிர சிலஇடங்களில் மிளகாய், கத்தரி, தக்காளி, வெண்டி முதலிய காய்கறிச் செடிகளும் வைப்பதுண்டு. இன்று வயல்களில் சிறுதானியம் வளராமல் இருப்பதற்கு காரணம் யாது என்று கமக்காரரிடம் விசாரித்தபோது பலவிதமான காரணங்கள் எடுத்துக் கூறப்பட்டன.

பொதுவாக பலரும் கூறிய முதலாவது காரணம் ஆடு, மாடு, கோழிகளின் தொல்லை. தானியத்தை விதைத்தவுடனே அக்கம்பக்கத்திலுள்ள கோழிகள் அவற்றை விழுங்கிவிடுகின்றன. பயிர் முளைத்து இலைவிட்டவுடனே ஆடுகள் கடித்துவிடுகின்றன. மரம் வளர்ந்து காய் வைத்ததும் மாடுகள் தின்றுவிடுகின்றன. ஊர் முழுவதும் ஒன்றுபட்டு ஆடுமாடுகளைக் கட்டி வைத்தால்தான் சிறுதானியம் செய்யலாம். முற்காலத்தில் அப்படிப்பட்ட ஒத்துழைப்பு இருந்தது. பிற்பாடு ஒத்துழைப்புக் குறைந்தபோது அரசாங்கம் சட்டம் பிறப்பித்தது. இன்றும் ஆடுமாடுகளை அவிழ்த்துவிடப்படாதென்று சட்டம் இருக்கிறது. இருந்தும் சிலர் தெரியாமையாலோ, தெரிந்தும் தெரியாமையாலோ அவிழ்த்துவிடுகிறார்கள். இரவு பகலாகக் கஷ்டப்பட்டு பயிரை வளர்ப்பவர்கள் தங்கள் வியர்வை சிந்தி வளர்த்த பசும்பயிர்களை ஆடுமாடு மேயும்போது எவ்வளவு துயரப்படுவார்கள்.

முன்பெல்லாம் ஆள் உயரத்துக்கு வளர்ந்தோங்கி நிற்கும் சணல் வயல்களில் இப்பொழுது சணல் ஏன் விதைப்பதில்லை என்று விசாரித்தபோது ஒரு ருசிகரமான- ஆனால் துக்கரமான-தகவல் எட்டியது. யாழ்ப்பாணத்தில் வளரும் காசுப் பயிர்களில் (cash crops) சணலும் ஒன்று. பிரதானமாக சணல் நாருக்காகவே அது பயிர்செய்யப்பட்டது. இந்நாரை வாங்கி மீன்பிடிப்பவர்கள் வலைபின்னுவார்கள். இப்பொழுது நைலோன் வலைவந்துவிட்டபடியால் சணல்நாருக்கு கிராக்கி குறைந்துவிட்டது. சணல் பயிரிடுவதும் மறைந்துவிட்டது. அரசாங்கம் வலைஞர்களுக்கு நன்மை செய்யப்போய் கமக்காரருக்கு வயிற்றில் அடித்துவிட்டது.

பழுத்த கிழவர் ஒருவர் இன்னுமொரு காரணம் கூறினார். அவர் சொன்னார்: தம்பி அந்தக் காலத்தில் நாங்கள் பாண் தின்பதில்லை. முதலாவது பாணே கிடையாது. இடைத்தீனுக்கு நாங்கள் எள்ளுருண்டை, ஒடியல் பிட்டு, பயறுத்துவையல், சாமைக் கஞ்சி, இலுப்பைப் பூத்துவையல், இப்படி காசு குடுத்து வாங்காத சாப்பாடுகளைச் சரிக்கட்டிக் கொள்ளுவம். இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்கு இதுகளைப் பற்றி ஒன்றுமே தெரியாது. எள்ளும், பயறும், குரக்கனும், சாமையும் மூடை மூடையாய் வீடுகள் தோறும் கிடக்கிற காலம் போய் இப்ப பாணும், பணிஸும், தேயிலையும், கோப்பியும் அரசு புரியுது. இது காலத்தின் கோலம்.

முதிர்ந்த அனுபவஸ்தரான அவர் கூறியதிலும் எவ்வளவு உண்மை இருக்கிறது. நாளுக்கு நாள் உணவுப் பொருட்களின் விலை ஏறிக் கொண்டே போகும் இந்தப் பஞ்ச காலத்தில் சிறு தானிய உணவுகளை நாங்கள் மறுபடியும் கற்றுக் கொண்டால் எவ்வளவு சுலபமாயிருக்கும். எத்தனை பணம் மிஞ்சும் எங்கள் வயல்கள் வெற்று நிலங்களாக இருக்க வேண்டியதில்லையே. வன்னிப் பகுதிகளில் இருபோகம் கட்டாயமாக சில வேளைகளில் முப்போகமும் பயிர் விளைகிறது. அங்கே தண்ணீர் பாய்ச்சல் வசதி உண்டு. தண்ணீர் பாய்ச்சும் வசதி இல்லாவிட்டால் வயல்கள் தோறும் தூர்ந்து போய்க் கொண்டிருக்கும் கிணறுகளை உபயோகப்படுத்தலாமல்லவா? அந்த நாட்களில் அப்படித்தான் செய்தார்கள்.

கிராமங்கள் தோறும் இப்பொழுது பயிர்ச் செய்கைக் குழுக்கள் அரசாங்கத்தின் ஆதரவோடு ஏற்பட்டிருக்கின்றன. மேலே கூறிய யோசனைகளை அவை கவனிப்பின், அதிகபலனுண்டு.

---

அநுராதபுரம், செவ்

அநுராதபுரம் ஆஸ்பத்திரியின் இரண்டாவது கட்ட வேலைகள் விரைவில் ஆரம்பமாகும். சென்ற மாதம் இதன் முதல் கட்டம் பூர்த்தியாக்கப்பட்டு பிரதமரால் திறந்து வைக்கப்பட்டது.

# ஐயாறன்

## எழுதுவது

எஸ். ஜே. வி. அவர்களுக்கு நீதிமந்திரி பதவியும், டாக்டர் நாகநாதனுக்கு சுகாதாரமந்திரி பதவியும், இனி வரவிருக்கும் கூட்டுமந்திரி சபையில் கிடைக்கலாமென்றும், எப்படியும் இரு தமிழர்களுக்கு புதிய அரசாங்கத்தில் மந்திரி பதவி கிடைக்கும் என்றும் தமிழர் மந்திரி பதவி வகித்தாலே நாட்டில் சமூக ஒற்றுமையும் நல்லுறவும் ஏற்படலாமென்ற காரணத்தால் இந்த யோசனை செய்யப்பட்டிருப்பதாயும் ஓர் அரசியல் அன்பர் வந்து சொன்னார்.

இதைக்கேட்டு நம்பமுடியாமல் சற்றே திகைத்தேன். அன்பர் சிரித்து விட்டார். இன்று "ஏப்ரல் (பூல்) முட்டாள்" தினம் என்பது பின்னர்தான் நினைப்பு வந்தது.

* * *

கூட்டு மந்திரிசபை ஏற்பட வேண்டுமென்பதை இடதுசாரி ஐக்கிய முன்னணியில் பெரும்பாலோர் ஆதரித்திருக்கிறார்களாம். இப்படி ஒரு கொழும்புப் பத்திரிகை கூறுகிறது. மற்றொரு பத்திரிகை, கூட்டு மந்திரிசபை யோசனையை இடதுசாரி ஐக்கிய முன்னணியும் தமிழரசுகட்சியும் நிராகரித்து விட்டதாயும் ஆகவே அது ஏற்படாதென்றும் சொல்லுகிறது.

பிலிப்பின் "பெரமுனை" என்ற எம். ஈ. பி. சஞ்சிகை ஒரு தேசிய கூட்டு அரசாங்கம் ஏற்படுவதே மிகவும் பொருத்தமும் அவசியமுமாகுமென்று எழுதுகின்றது.

"சென்ற 16 வருடங்களில் நம் பொருளாதார சமூகப் பிரச்னைகளைத் தீர்க்க நாடு தவறிவிட்டது. காரணம் நமது அரசியல் ஏகாதிபத்திய கட்டுக் கோப்பில் இருப்பதுதான். இப்போதுள்ள பார்லிமெண்டரி முறை கூடாது. இதை ஜனநாயகமென்று நாம் குழப்பிக்கொள்ளக் கூடாது. ஆகவே நமது அரசாங்க முறையை அடியோடு திருத்தி அமைத்துக்கொள்ள வேண்டும். இனி சற்றும் தவக்கம் செய்யாமல், உடன்மாறுதல் செய்ய வேண்டும்" என்று பறக்கிறது அப்பத்திரிகை.

* * *

பிலிப் ஏற்கெனவே இருமுறை எம். ஈ. பி. கட்சி சார்பாக பார்லிமெண்ட் தேர்தலுக்கு பல அபேட்சகரை நியமித்து போட்டியிடச் செய்தார், கொழும்பு முனிசிப்பல் தேர்தலிலும் அவரது கட்சியின் சார்பாக சிலர் போட்டியிட்டனர். ஆனால் மக்கள் ஆதரவு அவரது கட்சிக்கு கிடைக்கவில்லை. அதனால் தானோ என்னவோ "சீ! சீ! இந்தப் பழம் புளிக்கும்" என்று எட்டாப் பழத்தைக் கண்டு ஒரு நரி கூறியதைப்போல பார்லிமெண்ட் முறை வேண்டாமென்கிறார் போலும் அவர்!

* * *

சென்ற ஞாயிற்றுக்கிழமை இரவு சுமார் 2 மணியிருக்கும். "டெம்பிள்டிரீஸில்" பிரதமர் தூங்குகையில், ஒரு முக்கிய எதிர்க்கட்சித் தலைவரிடமிருந்து பிரதமருக்கு ஓர் அவசர டெலிபோன் கிடைத்ததாம். பரபரப்புடன் அவர் எழுந்து டெலிபோனைக் கேட்டபோது, பாணந்துறையிலே துருப்புக்கள் அணிவகுத்துச் செல்லுவதாக அந்தத்தலைவர் கூறினாராம்.

உடனே பிரதமர் இராணுவ தளபதிக்கும், பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கும் இதை அறிவித்தார். இருவரும் உடன் நடவடிக்கை எடுத்து விசாரித்தபோது இதுவெறும் 'புருடா' என்று தெரிய வந்ததாம். இது வெறும் கட்டுக்கதை என்று தெரிந்த பின்பே பிரதமர் மீண்டும் படுக்கப் போனாராம்.

எம். ஈ. பி. தலைவரான பிலிப்புத்தான் டெலிபோனில்

(5-ம் பக்கம் பார்க்க)

# தேரழுந்தூரில் கவிச்சக்கரவர்த்தி கம்பன் திருவிழா

## இராமாயண பெருங்காப்பியம் பற்றி அறிஞர்கள் புகழ்மாலை

தேரழுந்தூர், மார்ச் 31

"குமரகுருபர சுவாமிகள் ஹிந்தியைக் கற்று வடநாட்டில் கம்பராமாயணத்தைப் பரப்பியதிலிருந்தே இந்த மகா காவியத்தின் பெருமையையும் அதை ஆக்கிய கம்பநாட்டாழ்வாரின் பெருமையையும் உணரலாம். வேறு யார் மூலமுமின்றி குமரகுருபரசுவாமிகள் மூலம் இந்தக் காப்பியம் வடநாடு சென்றது எவ்வளவு சிறப்பான அம்சம்?" என தேரழுந்தூரில் நடைபெற்றகவிச்சக்கரவர்த்திகம்பர் திருவிழா முதல் நாள் நிகழ்ச்சியில் பேசிய ஹிந்து அறநிலைய ஆணையாளர் ஸ்ரீ சாரங்கபாணி கூறினர். ஸ்ரீ பி. ஜி. கருத்திருமன் எம். பி. காலை நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். டாக்டர் வி. வரதாச்சாரியார் வரவேற்புரை நிகழ்த்தினர்.

ஸ்ரீ கருத்திருமன் தமது தலைமை உரையில் கூறியதாவது:

"கம்பன் தனது காவியத்தில் ஆஸ்திகத்துக்கும் நாஸ்திகத்துக்குமிடையேயான போராட்டத்தை இரணியன், பிரகலாதன் பத்திரங்கள் மூலம் அற்புதமாக காட்டியிருக்கிறன், தந்தைக்கும் மகனுக்குமிடையேயான வாக்குவாதத்தில் "உனது நாராயணன் எங்கிருக்கிறன்" என இரணியன் கேட்டதையும், தூணிலும், துரும்பிலும், எல்லா விடத்திலும், அவன் இருக்கிறன் என்று பிரகலாதன் பதிலளித்ததையும் உயர்ந்த தத்துவத்தின் மூலம் கம்பன் விளக்கியிருக்கிறன்.

ஜீவாத்மா பரமாத்மாவை அடையவேண்டுமானல், சகல யோகங்களினலும் அடையலாம். லட்சாதிபதி ஒரு ரூபாய் தர்மம் கொடுப்பது பெரும் பாவம். ஒரு கூலிக்காரன் 1 பைசா தர்மம் செய்வது ஒரு கோடி புண்ணியம். இந்த தத்துவத்தை கம்பராமாயணம் ஒப்பற்ற அவருடன் விளங்குகிறது. விஷ்ணுவின் நாபியால் பிரம்மன் தோன்றியிருக்கிறன். ஆனல் திருமாலின் முகத்தைப் பார்த்ததில்லை. ஆனல் ஒரு சாதாரண சிறுவனன பிரகலாதனுக்கு ராமாயண தத்துவம் வந்தது."

ஸ்ரீ எம். கோபாலசாமி தென்கொண்டர் எம். பி பேசுகையில் சகோதரவாஞ்சையை கம்பன் காட்டும் அழகை வியந்துரைத்தார். வாலிக்கும் ராமனுக்கும், கும்பகர்ணனுக்கும் ராவணனுக்குமிடையே இந்த வாஞ்சையை கம்பர் அற்புதமாகப் புகுத்தியிருக்கிறர் என்றும் அவர் கூறினர்.

ஸ்ரீ ராமானுஜ தாத்தாச்சார்யா "கம்பனும் வால்மீகியும்" என்பது பற்றிப் பேசினர்.

"கம்பர் கண்ட தம்பியார்" என்னும் பொருள் பற்றி ஸ்ரீ சரவண ஆறுமுக முதலியார் பேசுகையில் ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற கருத்து எந்த ராமாயணத்திலுமில்லாத பெருஞ் சிறப்பாக கம்பராமாயணத்தில் அமைந்திருப்பதாகக் குறிப்பிட்டார்.

பிற்பகல் நிகழ்ச்சிகளுக்கு பேராசிரியர் ஆர். ஸ்ரீநிவாசராகவன் தலைமை வகித்தார். ஸ்ரீ கருத்திருமன் எம். பி. அப்போது வரவேற்புரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது:

ஊரணி நீர்நிரம்பினல் ஊருக்கெல்லாம் நன்மை. ஊருக்கெல்லாம் அது பொதுச் சொத்து. அதேபோல் செல்வம் அனைவரிடமும் இருக்கலாம். ஆனல் அறிவாளியிடம் இருக்கும் செல்வம் ஊருக்கெல்லாம் நன்மை பயக்கும். இதேபோல் தான் ராமபட்டாபிஷேகம் ராமன் அரசனல் அது உலகுக்கே நன்மை. மக்கள் அதையே விரும்பினர். இந்த அறிவு தத்துவத்தை கம்பன் தனது ராமாயணத்தில் எவரையும்விட சிறப்பாகக் காட்டியிருக்கிறர்.

கம்பராமாயணத்தை ஆராய்ச்சி செய்து உலகுக்கெல்லாம் விளக்கவேண்டும். இவ்விஷயத்தில் கல்கத்தாவில் தமிழர்கள் காட்டும் ஆர்வத்தைக் கண்டேன். மலாயா, சிங்கப்பூர் ஆகிய தூரதேசங்களில் தமிழர்வம் மிகுந்திருக்கிறது. புதுடில்லியிலிருந்து தமிழ் ஒலிபரப்புகளை அவர்கள் தவருமல் கேட்டு வருகிருர்கள். கம்பராமாயணத்தையும் இந்த வகையில் உலகுக்குப் பரப்பவேண்டும்."

பேராசிரியர் ஸ்ரீநிவாசராகவன், "கம்பன் கவிஞன். தத்துவநிலையில் உன்னதம், தியாகம், பெருந்தகைமை ஆகியவற்றைக் கொண்ட பத்திரங்களை தமது காப்பியத்தில் புகுத்தியிருக்கிறன்" என்றார். "ஒப்பற்ற பெருங்காப்பியத்தை ஆக்கி அவன் உலகப்பெருங் கவிஞனய் விளங்குகிறன்" என்று கூறினர்.

திரு. கே. எஸ். நாகராஜன் பேசுகையில் தமிழ்மக்களின் கருத்தை, நாட்டத்தை கம்பன் தன்காவியத்தில் காட்டியிருக்கிறன் என்றும் கோஞ்சியிலிருந்து ஜனநாயகத்துக்கு அவன் இழுத்துச் சென்று அரசியல் புரட்சியை உண்டு பண்ணியிருக்கிறன் என்றும் கூறினர். அதிகாரத்தை மக்களிடமிருந்து அரசன் பெற்று அதை மக்களின் நன்மைக்காகப் பயன்படுத்தும் தன்மையை எடுத்துக் கூறியிருக்கிறன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் பேசியபோது குறிப்பிட்டதாவது:

"பரதன் ராமனுக்குப் பகைவன் என்றும் எனவே தனக்கும் பகைவன் என்றும் குகன் காண்கிறன். ராமனைத் தேடி பரதசத்ருக்கர் காட்டுக்கு வரும் நிலையை அவன் காண்கிறன். முதலில் பரதனுடைய வடிவம், தலை, முகம், மார்பு, உடம்பு ஆகியன கண்ணுக்குத் தெரிகின்றன. பின்கவசம் தரித்த பரதனை, வில்லேந்திய பரதனை, கனல் தெறிக்கும் கண்கள் கொண்ட பரதனை அவன் எதிர்பார்த்தான். ஆனல் இது என்ன ராமனைப் போல் அல்லவா காட்சியளிக்கிறன் பரதன்? கவசம் இல்லை. வில் இல்லை. மரவுரி தரித்திருக்கிறன். சத்துருக்கன் அசல் லட்சுமணன் மாதிரியல்லவா இருக்கிறன். முன்பு ராமனுடைய பகைவன் என்று கருதப்பட்ட பரதன், இப்போது ராமனுடைய தம்பி என குகனல் கருதப்படுகிறன். இந்தக் காட்சியை கம்பராமாயணம் காட்டும் அழகே அழகு."

ஸ்ரீகாந்திமதிநாதன் தசரதனின் மூன்று மனைவியர் என்பதுபற்றியும், ஸ்ரீ ஆ. கலியபெருமாள் இராமனின் மூன்று சகோதரர்கள் என்பதுபற்றியும் பேசினர்கள்.

அயோத்தியாகாண்டம்முதல் யுத்தகாண்டம்வரை அன்பின் தத்துவமே மிளிர்கிறதென்றும் கலியபெருமாள் கூறினர்.

ஆரண்யகாண்டத்தின் சிறப்புப்பற்றி ஸ்ரீ வி. ஜயராமன் பேசினர். "ராமன்மீது ஆசை கொண்டு சூர்ப்பனகை திருமகளைவிடத் தமது உருவை அழகாக மாற்றியதை கம்பன் வருணிக்கும்போது நமக்கே ஆசை உண்டாகிறது" என்று அவர் கூறினர்.

ஸ்ரீ கு. அழகிரிசாமி பேசுகையில் வாலி எதிரியைப் பெரியவன் என்றும் தன்னைக் குறைந்தவன் என்றும் நினைத்தான் என்றும் வாலியின் சித்திரத்தை கம்பநாடன் அற்புதமாகத் தீட்டியுள்ளான் என்றும் குறிப்பிட்டார்.

## முதன்மந்திரிகள் மகாநாடு

புதுடில்லி, மார்ச் 31

மேற்குவங்கம், பீகார், ஒரிஸா, மத்தியபிரதேசம் ஆகிய ராஜ்யங்களின் முதன் மந்திரிகள் நேற்று உள்நாட்டு மந்திரி திரு. நந்தா கூட்டிய மகாநாட்டில் கலந்துகொண்டு வகுப்புக்கலவரம்பற்றி ஆலோசனை நடத்தினர்கள். புதிதாக வகுப்புக்கலவரங்கள் நடக்காமல் தடுக்கும் நடவடிக்கை பற்றி ஆலோசிக்கப்பட்டது

## சாவன்

புதுடில்லி, மார்ச் 31

நாட்டின் குறிப்பிட்ட பகுதியிலிருந்து மட்டும் ராணுவத்துக்கு ஆள்திரட்டும் கொள்கை கைவிடப்படும் என்றும், குறைவாக ஆள் சேர்க்கப்பட்ட பகுதிகளிலும் இனி அதிகப்படியானேர் சேர்க்கப்படுவார்கள் என்றும் பாதுகாப்பு மந்திரி திரு. சாவன் கூறினர்.

## சௌத்ரிக்கு உயர் விருது

புதுடில்லி, மார்ச் 31

இந்திய ராணுவத் தளபதி ஜெனரல் சௌத்திரிக்கும், விமானப் படைத்தளபதி ஏர் மார்ஷல் என்ஜினீயருக்கும் ஜனதிபதி நாஸர், ஐக்கிய அராபியக் குடியரசின் ஆக உயர்ந்த விருதுகளை அளித்திருக்கிறர். புதுடில்லியில் நடைபெற்ற ஒரு வைபவித்தில் இதற்கான பதக்கங்கள் வழங்கப்பட்டன.

## பம்பாயில் டிராம் ஒழிப்பு

பம்பாய், மார்ச் 31

நாளை ஏப்ரல் 1-ம் திகதி முதல் பம்பாய் நகரில் மின்சார டிராம் வண்டிகள் முற்ருக ஒழிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

## மைசூர் பட்ஜட்

பங்களுர், மார்ச் 31

அடுத்த நிதி ஆண்டுக்கு மைசூர் ராஜ்யத்தின் பட்ஜட் 246 கோடி என அறிவிக்கப்பட்டது.

## விஜயக்கூன் நியமனம்

கொழும்பு, செவ்.

பாகிஸ்தானிலுள்ள இலங்கைத் தூதர் மேஜர் விஜயக்கூன் ஈரான், ஈராக் ஆகிய நாடுகளுக்கும் இலங்கைத் தூதராக நியமிக்கப் பட்டிருக்கிறர். அவரது நிரந்தர ஸ்தானம் பாகிஸ்தானக இருக்கும்.

## ஈராக் அதிபர்

பங்களுர், மார்ச் 31

ஈராக் அதிபர் அரீபுக்கு மைசூர் அரசாங்கம் ஒரு விருந்தளித்தது. அதிபர் அப்போது பேசுகையில், ஈராக்குக்கும் இந்தியாவுக்குமிடையே சகிப்புத் தன்மை, அன்பு, ஒத்துழைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் நேசஉறவு நீடித்து வருவதாகக் கூறினர்.

## மலேஸியா-மணிலா ராஜரீகத் தொடர்பு

மணிலா, மார்ச் 31

மலேஸியாவுடன் கான்ஸல் ஜெனரல் அந்தஸ்தில் உறவு வைத்துக்கொள்ள பிலிப்பைன்ஸ் முடிவு செய்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

# அராபிய லீக்கின் அவசர கூட்டத்தில் கண்டனம்

## ஏமன் மீது பிரிட்டிஷ் தாக்குதலின் எதிரொலி

கெய்ரோ, மார்ச் 31

ஏமன்மீது பிரிட்டிஷ் விமானங்கள் தாக்குதல் நடத்தியது பற்றி ஆலோசிக்க அராபிய லீக்கின் அவசரக் கூட்டம் நடைபெற்றது.

அரபு நாடுகள் பிரிட்டனுடன் கொண்டுள்ள உறவு இச்செயலினல் மறுபரிசீலனை செய்யப் படவேண்டியிருக்குமென பிரிட்டனுக்குத் தெரிவிக்க மகாநாடு தீர்மானித்தது.

அரபு நாடுகளிலுள்ள தளங்களை விலக்குமாறு பிரிட்டனைக் கேட்டுக்கொள்ளவேண்டும் என்றும் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

மகாநாடு ஏமனுக்கு ஆதரவு தெரிவித்ததுடன், அந்த நாட்டுக்கு உதவிசெய்யுமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தைக் கேட்பதெனவும் முடிவு செய்தது.

சமீபத்தில் ஏமன் கோட்டை மீது 8 பிரிட்டிஷ் ஹண்டர் விமானங்கள் தாக்குதல் நடத்தியதால் பெண்கள், குழந்தைகள் உட்பட 25 பேர் மாண்டதாக முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது.

## ராஜாஜி புதல்வியை குத்தியவர்

### மனநோய் விடுதிக்கு அனுப்பப்பட்டார்

சென்னை, மார்ச் 31

ராஜாஜியின் புதல்வி ஸ்ரீமதி நாமகிரி அம்மாளைக் குத்தியதாகக் குற்றஞ் சாட்டபபட்டிருக்கும் சாமாராவ் மனநோய் ஆஸ்பத்திரிக்கு அனுபிவைக்கப்பட்டிருப்பதாயும், பொலிசார் புலன்விசாரணை செய்து வருவதாயும் முதன் மந்திரி திரு. பக்தவத்சலம் சட்டசபையில் கூறினர்.

## இரும்பு மந்திரி சுப்பிரமணியம்

புதுடில்லி, மார்ச் 31

போபால் கரைக மின்சார தொழிற்சாலை காலவரையறையின்றி மூடப்பட்டது குறித்து இரும்பு மந்திரி சுப்பிரமணியம் லோகசபையில் குறிப்பிட்டபோது, தொழிலாளரில் ஒரு பிரிவினரின் காலித்தனம் நிற்கும்வரை எந்த சமரசமும் ஏற்படமுடியாது என்றர். தகராறுகளைத் தூண்டிவடுபவர்கள் கடுமையாகத் தண்டிக்கப் படுவார்கள் என்றும் அவர் கூறினர்.

## எதிர்க்கட்சித் தலைவர் கண்டனம்

ராவல்பிண்டி, மார்ச் 31

பாகிஸ்தானில் ஜனநாயகத் தேர்தல் நடைபெருதிருப்பது குறித்து சட்டசபையில் எதிர்க்கட்சித் தலைவர் கண்டனம் தெரிவித்தார்.

## சபாநாயகர் ஓட்டளித்தார்

புதுடில்லி, மார்ச் 31

மத்திய பிரதேச சட்டசபையில், பட்ஜட் வாக்கெடுப்பின் போது இரு கட்சியினருக்கும் சமபலம் கிடைத்ததால், சபாநாயகர் தமது வாக்கை அரசாங்கத்துக்குக் கொடுத்து அதை நிறைவேறச்செய்தார். இதைத் தொடர்ந்து எதிர் தரப்பினர் வெளியேறினர்.

## குவாய்த் செல்வர்

புதுடில்லி, மார்ச் 31

குவாய்த்தில் எண்ணைத் தொழில் நுணுக்கங்களை ஆராய்ந்துவரும்பொருட்டு நிபுணர்கள், தொழில் நுட்ப அதிகாரிகள் ஆகியோரை இந்தியா அங்கு அனுப்பவிருக்கிறது.

## உள்நாட்டு மந்திரிகள் சந்திப்பு

### சாஸ்திரி நம்பிக்கை

புதுடில்லி, மார்ச் 31

பார்லிமெண்ட் காங்கிரஸ் கட்சியின் கூட்டம் நேற்று அகதிகள் பிரச்னைபற்றி ஆராய்ந்தது. இப் பிரச்னைக்கு பாகிஸ்தான் தீர்வு காணும் என நம்புவதாய் கூட்டத்தில் பேசிய இலாகா இல்லாத மந்திரி திரு. லால்பகதூர்சாஸ்திரி தெரிவித்தார்.

"இந்திய பாகிஸ்தான் உள்நாட்டு மந்திரிகளின் சந்திப்பு பலனளிக்கும் என நம்புகிறேன் பாகிஸ்தானில் சிறுபான்மயினரின் பந்தோபஸ்திற்கும், மாதர்களின் கௌரவத்திற்கும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது. சிறுபான்மையினர் மனிதத்தன்மையற்ற முறையில் நடத்தப்படுவது நின்று வெளியேற்றம் நிற்காவிடில் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும்" என்றும் திரு. சாஸ்திரி கூறினர்.

## வசாவிளான் இரட்டை கொலை வழக்கு

யாழ்ப்பாணம், புதன்

வசாவிளான் இரட்டைக் கொலை வழக்கு இன்று மல்லாகம் நீதிபதி திரு. ஜி எப். எச். அத்துறுபாறு முன்னிலையில் விசாரணைக்கு எடுததுக் கொள்ளப்பட்டது.

இவ் வழக்கில், வசாவிழான் குட்டியபுலத்தைச்சேர்ந்த சின்னட்டியன் நாகராசா, மாணிக்கம் சின்னட்டியன், கணபதி கந்தையா, கதிரன் ரத்தினம், கணபதி நடேசு ஆகிய ஐவர்மீதும் சின்னட்டியன் சீனியன் பெண்பாறி, வைரவன் ராசன் ஆகியோரைக் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பொலிஸ் தரப்பில் திரு. நடராசா காங்கேசன் துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் அரசரத்தினத்துடன் ஆஜரானர். எதிரிகள்சார்பில் திரு. ரி. கணேசலிங்கம் திரு. ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானர்.

டாக்டர் வேதாரணியம் சாட்சியமளிக்கையில் தான் 20-2-64ல் பிரேதபரிசோதனை செய்ததாகவும் தலையில் 3 அங்குல நீளமும் அரை அங்குல அகலமுமுடைய காயம் இருந்ததாகவும், அந்தக் காயம், மூளை ஓட்டை உடைத்ததாகவும், தலை உள் எலும்பு வெடித்திருந்ததாகவும், அக் காயம் மண்வெட்டிப் பிடியால் உண்டாகியிருக்கலாமென்றும் கூறினர்.

குறுக்கு விசாரணையின் போது அக் காயம், கல்லால் எறிந்தாலும் ஏற்பட்டிருக்குமெனக் கூறினர்.

டாக்டர் சி. ராசேந்திரம் சாட்சியமளிக்கையில் வைரவன் ராசனையும், 3-வது, 5-வது எதிரிகளையும் தான் பரிசோதனைசெய்ததாகவும், வைரவன் ராசன் மது அருந்தியிருந்தானென்றும், 3-ம் எதிரிக்கு வயிற்றைப் பிளந்த காயத்துடன் மொத்தம் 6 காயங்கள் இருந்ததாகவும், 5-வது எதிரிக்கு கத்திக்காயம் இருந்ததாகவும் கூறினர்.

மேல் விசாரணை அடுத்த மாதம் 10-ம் திகதிவரை ஒத்திப்போடப்பட்டுள்ளது.

# "கிராமத்தின் அபிவிருத்திக்கு பலநோக்கச் சங்கங்கள்"

உடுப்பிட்டி, செவ்

நெல்லியடி ஐக்கிய பண்டசாலையை நெல்லியடி பலநோக்குக கூட்டுறவுச் சங்கமாக மாற்றியமைப்பதற்கான விசேஷ பொதுக்கூட்டம் ஒன்று நெல்லியடி சனசமூக நிலையத்தில் உதவி கூட்டுறவு ஆணையாளர் திரு. எஸ். மதிபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

"ஒரு கிராமத்தின் பொருளாதார விருத்திக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வழிகோலலாம். இச்சங்கங்களுக்கு அங்கத்தவர்கள் தொகை பெரிதல்ல. உண்மையாக உழைக்கக்கூடிய ஒரு சில அங்கத்தவர்களேனும் கூட்டுறவு இயக்க மூலம் அக்கிராமத்துக்கே புது வாழ்வு சமைக்கலாம்" என்று தலைவர் கூறினர்.

நெல்லியடி பட்டினசபைத் தலைவரும் முன்னாள் உதவி கூட்டுறவு ஆணையாளரும் யாழ். கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி அதிபருமாகிய திரு. வே. சு. பொன்னையா குறிப்பிட்டதாவது:

பொருளாதார வளர்ச்சிக்காகத்தான் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. உணவுப் பொருட்கள் பற்றுக்குறை ஏற்பட்டுள்ள இந்த நாட்களிலே எமது அரசாங்கம் இறக்குமதியைக் கட்டுப்படுத்தி கூடாத வெள்ளை-மக்கல் அரிசியைப் பொதுமக்களுக்கு விநியோகம் செய்கிறது. குரக்கன், சாமை, தினை முதலிய மாற்றுணவுப் பொருட்களை நம்மவர்கள் செய்கைபண்ணுவது அரிதாகிவிட்ட காரணத்தினால் தான் இந்த இழிநிலை இன்று ஏற்பட்டுள்ளது.

இக்கிராமத்திலிருந்து 50—100 படித்த இளைஞர்கள் வன்னிநாட்டில் சென்று முடிக்குரிய நிலங்களில் குடியேறி ஒரு புதிய கிராமத்தை உருவாக்கவேண்டும். இவ்வாறு குடியேறி பொருளாதாரத்தை விருத்தி செய்துகொண்ட பின்னர் தான் தமிழர் தம் உரிமைக்காகப் போராடி வெற்றி பெறமுடியும்.

30 லட்சம் தமிழர்களும் அவர்களது பிற்சந்ததியினரும் நல்லபடி வாழ வேண்டுமானால் தன்னலம். பொறாமை-போட்டி, பூசல்கள் ஒழிந்த பொது நோக்குடைய பல கிராமங்களில் தோன்ற வேண்டும்.

பின்வருவோர் ஏகமனதாக நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ஏஸ் எஸ் சபாரத்தினம்உபதலைவர்:திருபொ. சிவப்பிரகாசம், செயலாளர்: திரு. ச.சுப்பிரமணியம்,நிர்வாக சபை அங்கத்தவர்கள்: திருவாளர்கள்: சி. வேலாயுதம், கே. கந்தையா, கே. முத்துக்குமாரு, கே. மயில்வாகனம், எஸ். இரத்தினசிங்கம், கே. இரத்தினசிங்கம்.

றீகல் (யாழ்ப்பாணம்)
REGAL — JAFFNA
NOW SHOWING
Daily at 4-45, 7-00 & 9-45 p. m.
Morning Shows
Sats & Suns at 10-30 a. m.
THE DAY THE EARTH CAUGHT FIRE
(Cinèmascope) 81

## புங்குடுதீவில் தண்ணீர்க் கஷ்டம்

ஊர்காவற்றுறை, செவ்

புங்குடுதீவு - மடத்துவெளி வட்டாரத்திலும் வேறு சில இடங்களிலும் குடிதண்ணீருக்காக மக்கள் கஷ்டப்படுகின்றனர். ஆண்டுதோறும் இம் மக்கள் அனுபவித்துவரும் இக்கஷ்டத்தைப் போக்க 'குழாய்நீர் திட்ட விநியோகம்' செயல்படவேண்டுமென மக்கள் முயற்சிசெய்து வருவதாக அறியப்படுகிறது.

ஆசிரியருக்குக் கடிதம்

## புதிய கட்டிடம் அவசியமா?

முல்லைத்தீவு கரிட்கட்டு மூலை தெற்கு கிராமசபைக்கென்று ஒரு காரியாலயம் 1956-ம் ஆண்டில் அரசாங்கத்தின் உதவிப் பணத்தைக்கொண்டு அப்போது இருந்த கிராமசபையினரால் சகலருக்கும் வசதியான போக்குவரத்துள்ள இடமான அளம்பிலில் கட்டப்பட்டது இக்காரியாலயத்திலேயே சென்ற 10 வருட காலமாக மேற்படி கிராமசபை இயங்கி வருகின்றது.

ஆனால்தற்போதுள்ள கி. சபையினர் செம்மலை என்னும் கிராமத்தில் ஒரு காரியாலயத்தைக் கட்டவேண்டும் எனத் தீர்மானித்து அதற்கான கேள்விப் பத்திரங்களையும் கோரியுள்ளனர்.

அளம்பில் கிராமத்தில் தற்போது இயங்கிவரும் காரியாலயம் உள்ள இடத்திலிருந்து அரைமல்தூரத்தில் உள்ள செம்மலைக்கிராமத்தில் மற்றொரு காரியாலயமா?

எனவே இதைப்பற்றி அரசாங்கமும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் கவனம் செலுத்தி அரசாங்கத்தினதும் பொதுமக்களினதும் பணம்வீணை முறையில் செலவிடப்படுவதைத் தடுக்கும்படி வேண்டுகிறோம்.

மோ. பேதுருப்பிள்ளை,
முல்லைத்தீவு.

## திருக்கேதீச்சர திருப்பணிச்சபை நிதிதிரட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணம், செவ்

வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலய மண்டபத்தில் திருக்கேதிச்சர சுவாமிகோயில் திருபணி நிதிச்சபைக் கூட்டம் திரு. வி. கே. சின்னையா தலைமையில் சென்ற சனிக்கிழமை மாலை நடைபெற்றது. இக் கூட்டத்தில், சுவாமி கோவில், கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம் கருங்கற் திருப்பணியாகச் செய்து முடிப்பதற்கு ஏறக்குறைய இரண்டு லட்சரூபாயாகும் என்று மதிப்பிடப்பட்டிருப்பதாக புனருத்தாரண சபைத் தலைவர் சேர் கந்தையவைத்திநாதன் அறிவித்துள்ளதாக சங்கக் காரியதரிசி கூறினர்.

பின்னர் இப்பணத்தைச் சேர்ப்பதற்கு வேண்டிய வழிவகைகள் ஆலோசிக்கப் பட்டன. இந்தப் பணம் சேர்ப்பதற்கு ஆரம்பத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் தீவிர முயற்சி எடுக்கவேண்டுமெனத் தீர்மானித்து, குடாநாட்டுக் காரியாதிகாரி வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் கிளைச்சபைகள் நியமிக்க வேண்டுமென்றும், அச்சபைகளை நிறுவுவதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செயவதற்கு ஒவ்வோர் காரியாதிகாரப் பகுதிக்கும் செயற்குழு நியமிக்கப்பட்டது.

அடுத்தமாத ஆரம்பத்தில் திருக்கேதிச்சர அலங்காரத் திருவிழா முடிவடைந்தவுடன் நிதி திரட்டுவதற்கு வேண்டிய முயற்சிகள் எடுப்பதென முடிவு செய்யப்பட்டது. 1964-ம் ஆண்டு நிறைவெய்தமுன் நிதி திரட்டு வேலை முடிவு பெற வேண்டுமெனவுந் தீர்மானிக்கப்பட்டது. ——

## 'தேயிலைத் தொழில் பாதிக்கிறது'

கொழும்பு, செவ்வாய்

தேயிலைத் தொழில் மீது அதிகவரி சுமத்தப்பட்டிருப்பதாயும், ஆலைகளுக்கும் வாகனங்களுக்கும் உபகரணங்கள் கிடைப்பது கஷ்டமாய் இருக்கிறதென்றும் ஹேவாஹெட்ட மாவட்ட தோட்டத்துரைமார் கழகத் தலைவர் திரு. தியாகராஜா சங்கக் கூட்டத்தில் பேசும்போது கூறினர். இறக்குமதி கட்டுப்பாட்டைத்தளர்த்தி, பயிர்த் தொழிலுக்கான உயர்ந்த வரியைக் குறைப்பதுமூலம் அரசாங்கம் இதற்கு நிவாரணம் அளிக்கவேண்டும் என்றும் அவர் கூறினர்.

# ஒரு பெண் உட்பட 14பேர் போட்டியின்றி தெரிவு

## பண்டத்தரிப்பு கிராம சபை தேர்தல்

சுழிபுரம், செவ்வாய்

பண்டத்தரிப்பு கிராமசபையின் தேர்தலுக்கு நியமனப்பத்திரங்கள் யாழ்ப்பாண தேர்தல் அதிகாரியால் அண்மையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இருபது வட்டாரங்களைக்கொண்ட கிராமசபையில் தற்போதைய தலைவர் உட்பட பதினன்கு வட்டாரங்களுக்கு அங்கத்தவர்கள் போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர். அபேட்சகர்கள் விபரம் வருமாறு:-

1-ம் வட்டாரம்: ரி. தியோகுப்பிள்ளை, வி. எப். செல்லத்துரை.

2-ம் வட்டாரம்: பி. தியாகராசா, வி. இராசரத்தினம்.

3-ம் வட்டாரம்: திருமதி பேர்லி அத்தனுசியார் (போட்டியில்லை.)

4-ம் வட்டாரம்: எம். அந்தோனிப்பிள்ளை, ஏ. ஞானப்பிரகாசம்.

5-ம் வட்டாரம்: எஸ். சபாபதிப்பிள்ளை (போட்டியில்லை)

6-ம் வட்டாரம்: இ. இராமலிங்கம் (போட்டியில்லை)

7-ம் வட்டாரம்: ரி. மு கேசு, வி. தம்பிப்பிள்ளை.

8-ம் வட்டாரம்: எஸ். மார்க்கண்டு, எப். எக்ஸ். வி. சந்திரசேகரர்.

9-ம் வட்டாரம்: எஸ். ஞானப்பிரகாசம், வி.செல்லத்துரை.

10-ம் வட்டாரம்: ஏ. சந்தியோகு (போட்டியில்லை)

11-ம் வட்டாரம்: வி. மயில்வாகனம் (போட்டியில்லை)

12-ம் வட்டாரம்: ஏ. சுவாம்பிள்ளை (போட்டியில்லை)

13-ம் வட்டாரம்: ஏ. பிரான்சிஸ் (போட்டியில்லை)

14-ம் வட்டாரம்: எஸ். நாகமுத்து (போட்டியில்லை)

15-ம் வட்டாரம்: பி குமாரசிங்கம் (போட்டியில்லை)

16-ம் வட்டாரம்: எஸ். எஸ். சூசைப்பிள்ளை (போட்டியில்லை)

17-ம் வட்டாரம்: ஏ. மரியாம்பிள்ளை (போட்டியில்லை)

18-ம் வட்டாரம்: வி. முத்தையா (போட்டியில்லை)

19-ம் வட்டாரம்: கே. சுப்பிரமணியம் (போட்டியில்லை)

20-ம் வட்டாரம்: எஸ். கனகசபாபதி (போட்டியில்லை)

## "சிறுதொழில்கள் செய்யலாம்"

பருத்தித்துறை, திங்கள்

"நாட்டின் முன்னேற்றம் பெரும்பாலும் பெண்களிலே தான் தங்கியுள்ளது. ஆடம்பரமும் டாம்பீகமும் இன்றி சிக்கனத்தைக் கடைப்பிடித்து வருவதுடன் வருவாய்க்கேதுவான சிறுதொழில்களையும் அவர்கள் செய்ய முன்வர வேண்டும்."

இவ்வாறு வடமராட்சிக் காரியாதிகாரிதிரு. ஜே.டி.ஆர்னல்ட் துப்பனை மாதர்முன்னேற்றச்சங்கப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; சுமார் ஆறுலட்சம் ரூபாய் வெண்காயக் கூடைகட்காக வெளியே செல்கின்றது; பெண்கள் விருப்பமுடன் இத்தொழிலில் ஈடுபட்டால் இம்பணத்தின் பெரும்பகுதிநம்மை வந்தடையும் என்றூர்.

நடப்புவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்: திருமதி சிவபாக்கியம் கந்தசாமி, தலைவி: திருமதி நாகேஸ்வரி முருகேசு, காரியதரிசி: சுகிர்தரத்தினம் மகாதேவன்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனி வீதி)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ண (திருகோணமலை)
விஜிதா (ஹட்டன்) மொடேர்ன் (பதுளை) வெம்பிளி (கண்டி)
கல்யாணி (நாவலப்பிட்டி)

எம். ஜி. ராமச்சந்திரன்—பி. சரோஜாதேவி
எம். ஆர் ராதா டி. ஆர். ராஜகுமாரி
எஸ். ஏ. அசோகன்—நாகேஷ்
மற்றும் பலர் நடித்த்

ஆர். ஆர். பிக்சர்ஸ்

பெரிய இடத்துப் பெண்

டைரக்ஷன்: ராமண்ணு
இசை: விஸ்வநாதன் ராமமூர்த்தி
பாடல்கள்: கண்ணதாசன்
கதை-வசனம்: சக்திகிருஷ்ணசாமி

பிரீடம் மார்க் கற்பூரம்




கற்பூரம் வாங்கும்போது 'பிரீடம்' மார்க் கற்பூரம் என்றே கேட்டு வாங்குங்கள்.
இது ஓர் சிறந்த தயாரிப்பு
தயாரிப்பாளர்கள்,
பிரீ லங்கா இன்டஸ்ட்ரீஸ்.
மினுவாங்கொட.

# "தமிழர் தமிழ் படித்து அறிந்து இன்புற வேண்டும்"

## நீதியரசர் தம்பையா புத்திமதி

சாவகச்சேரி, திங்கள்

"அறிவாகிய ஞான ஒளி வீசிக்கொண்டிருக்கும் வித்தியாலயங்கள் நாட்டில் எவ்வளவு பெருகிக்கொண்டிருக்கிறதோ அவ்வளவும் நமக்கு நன்மையையே தரும். பாடசாலைகள் நாட்டின் கண்கள் போல் விளங்கிக்கொண்டிருக்கின்றன. இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் தோன்றிய தமிழ், இன்னும் இளமையாகவும் இனிமையாகவும் இருப்பதாலேயே, உலகமெங்கும் பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் காணக்கூடியதாய் விளங்குகிறது. தமிழின் இனிமையையறிந்த பிக்கு ஒருவர் அதைப்படித்துப் பாண்டித்தியமடைந்து பட்டம்பெற்றுர். தமிழ்த்தாயின் வயிற்றில் உதித்த தமிழர் கண்டிப்பாகத் தமிழைப் படித்தறிந்து இன்புறவேண்டும்.

இவ்வாறு நீதியரசர் கலாநிதி எச். டபிள்யு. தம்பையா கியு. ஸி. சரசாலை ஸ்ரீகணேச வித்தியாசாலைக் கட்டட நிதிக்காக நடைபெற்ற கலைவிழாவில் பிரதம விருந்தினராய்க் கலந்துகொண்டு பேசுகையில் கூறினர்.

இவ்விழா சாவகச்சேரி டிறிபேக் கல்லூரித் திறந்த வெளியரங்கில் நடைபெற்றபோது சாவகச்சேரி நகர சபைத் தலைவரும் சமாதான நீதிபதியுமான நியாயதுரந்தரர் திரு. ஆர். டி. சிவகுரு சைவாசார முறைப்படி குத்துவிளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார்.

மேற்படி கலைவிழாவில் எழுபத்தைந்து வயது நிரம்பிய கலையரசு சொர்ணலிங்கத்துக்கு நீதியரசர் "முத்தமிழ் வித்தகர்" என்ற பட்டத்தைக் குறிக்கும் தங்கமெடல் ஒன்றைச்சூட்ட, இளைப்பாறிய உதவி வித்தியாதிபதி திரு. எஸ். யு. சோமசேகரம் பொன்னுடைபோர்த்த. இசைப் புலவர் திரு. ஸி. செல்லத்துரை பாராட்டுப் பாமாலை பாடினர்.

இயல், இசை, நாடக அரங்குகளை எம். பி. திரு. வி. என். நவரத்தினமும், நீதியரசர் திரு. தம்பையாவும் பாரியாரும், திரு. எஸ். யு. சோமசேகரமும் பாரியாரும் ஆரம்பித்து வைத்தனர்.

# வானொலி நிலையத்தாரின் கத்திரிக்கோல் பிரயோகம்

## கண்டி எம். பி. குற்றச்சாட்டு

கண்டி, செவ்வாய்

இலங்கையின் முதலாவது பிரதமரும் தேசபக்தருமான டி. எஸ். சேனநாயக்காவை 'தேசபிதா' எனக் குறிப்பிட்டதை இலங்கை வானொலி நிலையத்தார் ஏற்றுக்கொள்ளவில்லை.

காலஞ்சென்ற அரசியல் தலைவர் ஜோர்ஜ் சி. டி. சில்வாவின் 13வது ஆண்டு நினைவுநாளையொட்டி அவரைப் பற்றிய ஒரு பேச்சின் கையெழுத்துப் பிரதி இலங்கை வானொலி நிலையத்தாரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அதில் டி. எஸ். சேனநாயகாவை இலங்கையின் தேசபிதா என்று குறிப்பிடப்பட்டிருந்தது. எழுதுப் பிரதியைப் பரிசோதித்த வானொலி நிலைய அதிகாரி இவ்வார்த்தைப் பிரயோகத்தை நீக்கிவிட்டார்.

பேச்சின் கையெழுத்துப் பிரதி ஜோர்ஜ் சி. டி. சில்வா நினைவுவிழாச் சபையாரால் அனுப்பப்பட்டிருந்தது.

இது, விபரங்களை காலஞ்சென்ற சில்வாவின் நினைவு விழாவைக் கொண்டாடுமுகமாக விக்டோரியாப் பூந்தோட்டத்தில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் பேசியபோது, கண்டி எம். பி.யும் மேயருமான இ. எல். சேனநாயகா தெரிவித்தார்.

"டி. எஸ். சேனநாயக்காவிடம் ஜோர்ஜ் சி. டி. சில்வா கொண்டிருந்த நெருங்கிய தொடர்புகளை நாடறியும். இலங்கை வானொலி நிலையத்தாருக்குமட்டும் தெரியாமற்போனது அதிசயம்தான்" என்று கண்டி எம். பி. தமது உரையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் இலங்கையின் சுதந்திரத்திற்காகப் போராடிய தேசபக்தர்களான ஜோர்ஜ் சி. டி. சில்வா, இ. டபிள்யு. பெரேரா, டி. பி. ஜெயதிலகா, பொன்னம்பலம் இராமநாதன் என்போர் தேசமக்களின் நினைவிலிருந்து என்றைக்கும் அகலமாட்டார்கள் எனக் கூறினர்.

ஏ. சி. விக்கிரம, ஏ. இ. குணசிங்கா உட்பட மற்றும் பல பிரமுகர்களும் இவ்விழாவில் கலந்துகொண்டு உரையாற்றினர்கள்.

## 300 பேர் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கவனத்திற்கு கொண்டுவரப் பட்டுள்ளது. 300 மக்களின் உபயோகத்திற்கு ஒரு கிணறு ஒரு குளம் மட்டுமே இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த மக்கள் வசிக்குமிடத்துக்கு அரைமைல் தொலைவில் கிணறு அமைந்திருப்பதனல் மாரிகாலத்தில் வெள்ளம் தேங்கி கிணற்றுக்குச் செல்ல முடியாமல் இருப்பதாகவும், பாதை அமைக்கப்பட்ட வயல்களின் வரம்புகள் மிகவும் அகலம் குறைந்திருப்பதாகவும் பிரதான பாதை இல்லாதிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோடைகாலத்தில் இக்கிணற்றுநீர் வற்றிவிடுவதனுல் மத்திய இடத்தில் புதிய கிணறு வெட்டித் தரும்படியும் கோரப்பட்டுள்ளது.

சிறுபான்மைத் தமிழ் மக்களின் நல்வாழ்வை உத்தேசித்து தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளும்படி வடமராட்சி காரியாதிகாரி, கட்டைவேலி, கிராமசபைத் தலைவர், உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் ஆகியோரிடம் கேட்கப்பட்டுள்ளது.

## கைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

பருத்தித்துறை, செவ்

பருத்தித்துறை விளையாட்டுக் கழகம் நேற்றைய தினம் கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்றை ஆரம்பித்துள்ளது.

செவின்ஸ்ராஸ், ரவுண்ரீம், உடுவில் ஸ்ரார்,மாதனை, இமையாணன், புட்டளை, உதயதாரகை, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, சிவராசாஸ் முதலான பத்து விளையாட்டுக் கழகங்கள் கலந்துகொள்ளும் இப்போட்டிகளின் வெற்றிக்கான இறுதிப் போட்டி ஏப்ரல் மாதம் 13-ம் திகதியன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுவருடக் கொண்டாட்டத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட இப்போட்டிக்கான வெள்ளிக் கிண்ணத்தை பருத்தித்துறை நகரசபையின் தலைவர் திரு. க. நடராசா அன்பளிப்புச் செய்துள்ளார்.

## கூட்டுறவுக்கடை

பளை, செவ்வாய்

பளை, வண்ணன்கேணி-தம்பகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகசபைக் கூட்டத்தில், புதிதாக ஒரு கூட்டுறவுக் கடையை விரைவில் திறப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

## நாவற்குழி வெற்றி

நாவற்குழி, செவ்வாய்

நாவற்குழி இளைஞர் விவசாயக் கழகத்தின் ஆதரவில் நாவற்குழி 'லேக்பிலோர்' மைதானத்தில் கலட்டி ரோயல்சன் ஸராஸுக்கும், நாவற்குழி யங் றேஞ்ஜர்ஸிக்கும் இடையே நடந்த கிரிக்கெட் போட்டியில் ரோயல்சன்ஸ்ராஸ் முதலாம் இரண்டாம் ஆட்டத்தில் முறையே 25, 86 ரன்களைப் பெற்று மொத்தம் 111 ஓட்டங்களைப்பெற்றது. யங்றேஞ்ஜர்ஸ் முதலாம் ஆட்டத்தில் 69 ஓட்டங்களையும் இரண்டாம் ஆட்டத்தில் 5 விக்கட்டுகள் நஷ்டத்திற்கு 45ஓட்டங்களையும்பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டதினல் 5 விக்கட்டுகள் 3 ஓட்டங்களால் வெற்றியைச் சுவீகரித்தது.

## தமிழ்மொழி பயிற்சிக் கழகம்

சுழிபுரம், செவ்வாய்

வட்டுக்கோட்டை வட்டாரப் பாடசாலை ஆசிரியரின் தமிழ்மொழிப் பயிற்சிக் கழக வகுப்புகள் பண்ணாகம் மெய்கண்டான் உயர்தரப் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. வடபிரதேச பதில் உதவி வித்தியாதிபதி திரு. எஸ தணிகாசலம் தலைமை வகித்தார். வட்டார வித்தியாதரிசி திரு. ச. சபாபதி வரவேற்புரை நிகழ்த்தினர்.

"செந்தமிழ் மொழியைச் சிறப்புடன் கற்பித்தல்" என்னும் பொருள் பற்றி பண்டிதை திருமதி சத்தியதேவி துரைசிங்கம், திரு மு. சதாசிவம், திரு. க. கயிலாயநாதன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

## விவசாயி தற்கொலை

உடுப்பிட்டி, செவ்.

கரவெட்டி வடக்கு வதரி என்னும் இடத்தைச் சேர்ந்த வல்லிபுரம் தம்பையா (வயது 52) என்னும் விவசாயி கிருமிநாசினி அருந்தி மரணமானர்.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. கந்தையா தாமோதரம்பிள்ளை விசாரணையின் பின்னர் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## வானொலிநிகழ்ச்சிகள்

### புதன் 1-4-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-50 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராம சஞ்சிகை. 6-45 நேயர்விருப்பம், 7-15 பேச்சு விஞ்ஞானம்—வி. கே. நல்லையா, 7-30 வயலின் எஸ். வைத்தீஸ்வரஐயர், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 ராம்குமாரசாமி—பாட்டு, 10-15 தேர்ந்த இசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-30 மணித்திருநாடு, 8-15 தேரழுந்தூர் கம்பர் விழா பற்றிய ரேடியோ வர்ணனை.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-30 வாத்திய இசை, 1-50 மெல்லிசை, 2-10 கல்வி ஒலிபரப்பு.

மாலை 5-15 டி. வி. சிவசிதம்பரஐயர் புல்லாங்குழல், 5-45 ஆகாஷ்வாணி ஒலிப்பதிவுகள்.

இரவு 6-20 கிராம நிகழ்ச்சிகள், 7-45 பிடிசோறு கவிதை நாடகம், 8-00 திரைப்பட இசை, 8-30 வாத்திய இசை, 8-45 குரல் இசை, 9-50 இசை மாலை, 10-00 டி. வி. சிவசிதம்பரஐயர்—புல்லாங்குழல்.

## மனேச்சர் தேவை

பளை, வண்ணன்கேணி, தம்பகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒரு மனேச்சர் பதவிக்கு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன், தலைவர், வண்ணன்கேணி, தம்பாகமம் ப. நோ. கூட்டுறவுச் சங்கம், பளை என்ற விலாசத்திற்கு 8-4-64-ம் திகதிவரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. சம்பளம்:- எல்லாம் உட்பட மாசம் ரூபா 100/-விருந்து ரூபா 300/-வரை வருடா வருடம் திறமைக்கேற்ப உயர்ச்சி கொடுக்கபபடும். திறமைக்கேற்ப உற்சாக உபகாரப் பணமும் வழங்கப்படும்.

2. தகுதி காண் காலம்:- 6 மாதம், அதன்பின் நிரந்தரமாக்கப்படும்.

3. கல்வி:- சி. த. ப. பரீட்சை சித்தியடைந்தவராயும், ஆங்கில அறிவு உடையவராயும் இருத்தல் வேண்டும். கூட்டுறவு பயிற்சி கலாசாலையில் பயிற்சி பெற்றவராயிருப்பின் விரும்பத்தக்கது.

4. வயது:- 23-க்கும் 35-க்கும் உட்பட்டவராயிருத்தல் வேண்டும்.

5. பிணை ரொக்கம்:- ரூபா 1,000/-; ஆதனம் ரூபா 3,000/-

6. சமீபத்திய மூன்று நற்சாட்சிப் பத்திரங்களுடன் பதிவுத் தபால் மூலம் விண்ணப்பிக்கவும்.

ச. சின்னத்துரை,
தலைவர்.

1-4-64. 133

## இ. போ. ச.

### யாழ் கிழக்கு டிப்போ

சென்ற 1963-ம் ஆண்டு சித்திரை 1-ந் திகதி புதுவருஷப் பிறப்பைமுன்னிட்டு மானிப்பாய் மருதடி விநாயகராலயத்தில் தேர், தீர்த்த இரு விழாக்களிலும் கலந்துகொண்ட பக்தகோடி மக்களுக்கு மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு அருகாமையிலிருக்கும் பஸ் நிலையத்தில் யாழ். கிழக்கு டிப்போ, மல்லாகம் டிப்போவைச் சேர்ந்த பஸ் சாரதிகள், காப்பாளர்கள், மெக்கானிக்கர்கள், ஆபீஸ் லிகிதர்களால் ஸ்தாபிக்கப்பட்ட தண்ணீர்ப்பந்தல் மிகவும் சிறப்பாகவும் நல்லமுறையிலும் தண்ணீர் தயாரித்து டிப்போ ஸ்தாபனத்தாரின் பெயரில் விலாசமிட்டுத் தாகத்தைத் தீர்ப்பதற்கு தண்ணீர் விநியோகம் அளிக்கப்பட்டதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்ரேம்.

சென்ற வருடத்தைப்போல் இம்முறையும் எல்லா நண்பர்களும் ஒன்றுசேர்ந்து கூடிய பண உதவிபுரிந்து தண்ணீர்ப் பந்தலை நியமிக்கும்படி டிப்போ ஊழியர்களைக் கேட்கின்ரேம் டிப்போவைச் சேர்ந்த திரு. K. சுப்பிரமணியம் அவர்களால் பணம் வசூலித்து நடப்பிக்கப்பட்டது. இதற்குக் கூடிய ஊக்கம் எடுத்தவர் மானிப்பாயைச் சேர்ந்த பொ. அமிர்தலிங்கம் அவர்கள். இப் பெரும் செயலை ஆற்றிய ஊழியர்களுக்கு மருதடியான் கருணைபுரிவாராக. டிப்போ முகாமையாளர் அவர்களுக்கும், சீனியர் டிப்போ இன்ஸ்பெக்டர் அவர்களுக்கும் எங்களது நன்றியைத் தெரிவிக்கின்ரேம்.

S. இராமேஸ்வரம்-ஆலய தர்மகர்த்தா, S. கணேசரத்தினம்-ஆலயதர்மகர்த்தா, P. அமிர்தலிங்கம்-விவசாயி, S. பஞ்சாட்சரம்-சைவக்குருக்கள், V. இரத்தினம்-மோட்டார் மெக்கானிக், K. தம்பையா பென்ஷனியர், S. பொன்னையா-மலாயன் பென்சனியர், N. செல்லத்துரை-மனேஜர் நடராசா ஸ்ரோர், V. சின்னத்துரை-கார்சாரதி.

88 மானிப்பாய்வாசிகள்.

## இராணுவ படைகளும் பொது சனங்களும்

### தளபதி அறிவுரை

பண்டாரவளை, செவ்.

'பொது சன நம்பிக்கையை வெற்றி கொள்வதே நமது முதற் கடமையாயிருக்க வேண்டும். அப்பொழுதுதான் நமது நாட்டை பகைவர்களிடமிருந்தும் உள்நாட்டு விரோதிகளிடமிருந்தும் காப்பாற்ற வல்லதொரு சக்தியை நாம் அடைந்தவர்களாவோம்" என்பதாக இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஏ. ஆர். உடுகமடியத்தலாவை இராணுவப் பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற ஒரு வைபவத்தில் பேசியபோது கூறினர்.


## வரி விளம்பரம்

### உள்நாட்டுத் தயாரிப்புகள்

உள்நாட்டுத் தயாரிப்புகள் என்பதற்காக வாங்குங்கள் என்று நாம் கூறவில்லை. வெளிநாட்டுத் தயாரிப்புகளிலும் பார்க்கச் சிறந்தவை, விலை குறைந்தவை என்பதற்காக வாங்குங்கள் என்றே கூறுகிரேம். விபரங்களுக்கு ஆங்காங்கே உள்ள பிரதிநிதிகளுடன் அல்லது எங்களுடன் கலந்துகொள்ளவும். அ. த. பாலசுப்பிரமணியம். அளவெட்டி. 1947

### ரேடியோ

வாங்கவோ, விற்கவோ பழுதுபார்க்கவோ, சிறந்த இடம்.

S. சுலைமான்கண்டு & பிரதர், காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 55

### அரைச்சலார்

அநேக மக்களின் ஆதரவு பெற்ற சுன்னுகம் "பிறின்ஸ்" புகைப்பட ஸ்தாபனத்தார் 10-வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 25-4-64 வரை அரைச்சலார். 62

### தேவை

அனுபவமுள்ள லொறிச் சாரதிகள் தேவை. வேண்டிய விபரங்களுடன் 16-4-64-க்கு முன் பதிவுத் தபாலில் விண்ணப்பிக்கவும்.

தலைவர்,
முல்லைத்தீவு பல நோ. கூ. ச
சமாசம்,
83 முல்லைத்தீவு.

### வீடு விற்பனைக்கு

ஆடியபாத ரோட், நல்லூர், யாழ்ப்பாணத்தில் புதிதாக அமைக்கப்பட்ட வீடும் 3 1/2 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. பின்வரும் விலாசத்திற்கு மனுச்செய்யவும்:- ஆ. பொன்னுத்துரை, P. W. D. மருதங்கடவலை. 86

### தேவை

அனுபவம் வாய்ந்த கைத்தறி நெசவாளர்கள் தேவை. வேலைக்கேற்ப வேதனம் கொடுக்கப்படும். விடுதி வசதியும் உண்டு. 4-4-64 சனிக்கிழமைக்கு முன்னர் நேரில்வந்து சந்திக்கவும். "வள்ளுவன் கைத்தறி", கண்ணைவத்தியர்ஒழுங்கை, அளவெட்டி. 87


## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அந்தத் தகவல் கொடுத்ததென்று தெரிவதாக ஒரு செய்தியைப் பார்த்தேன்.

இதுவும் 'ஏப்ரல் முட்டாள்' பகிடியோ என்று நினைக்கிறீர்களா? சென்ற ஞாயிற்றுக்கிழமை மார்ச் 29-ம் திகதியேயாதலால், இது அப்படி இருக்க முடியாது.

* * *

மின்னளந்த மேல் முகட்டின் மேலுற்றான் காண் விண்ணவர்தம் பெருமான் காண் மேவிலெங்கும், முன்னளந்த மூவர்க்கும் முதலானன் காண் மூவிலைவேற் சூலத்தெங் கோலத்தான் காண், எண்ணளந்தென் சிந்தையே மேவினன் காண் ஏவலன் காண் இமையோர்களேத்த நின்று, மண்ணளந்த மாலறியா மாயத்தான் காண் மாகடல்சூழ் கோகரணம் மன்னினனே.

—திருநாவுக்கரசர்.

# ஏப்ரல் 8-ந் திகதி தொழிற்சங்க கமிட்டி கூடும்

## 21 கோரிக்கை கையளிக்கும் தினம் முடிவாகும்

கொழும்பு, செவ்வாய்

தொழிற்சங்கங்களின் 21 கோரிக்கைகளில் மாதம் 30 ரூபாய் சம்பள உயர்வு, மேலதிக சம்பள விடுமுறை, மேலதிக சுகவீன விடுமுறை ஆகிய மூன்று பிரதான கோரிக்கைகளுக்கு மட்டும் தனியார் துறைக்கு வருடம் ரூபா 210 லட்சம் செலவாகும் என இலங்கை முதலாளிகள் சம்மேளனம் அறிவித்திருக்கிறது.

பிரதான ஏற்றுமதி, இறக்குமதி, என்ஜினியரிங், கட்டிடப் பிரிவுகள் 113 அங்கத்தினர்களைக்கொண்ட சம்மேளனம் இதுபற்றி ஏற்கனவே தனது அங்கத்தினர்களுடன் தொடர்புகொண்டிருக்கிறது. 21 கோரிக்கைகளில் 6 கோரிக்கைகள் சம்மேளனத்தைப் பாதிக்கிறது எனக் கூறப்பட்டது.

இதற்கிடையில் வருகிற ஏப்ரல் 8-ம் திகதி கூட்டு தொழிற்சங்கக் கமிட்டி கூடி, இந்தக் கோரிக்கைகளை உத்தியோக ரீதியில் கையளிக்கும் தினம் பற்றித் தீர்மானிக்கும் என தொழிற்சங்க அதிகாரி ஒருவர் கூறினர்.

இவ்வாண்டு மேதினம் 21 கோரிக்கைகளுக்கான மேதினமாயிருக்குமென அறிவிக்கப்பட்டது.

அரசாங்கத்துறையில் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதானல் வருடம் 1173 லட்சம் செலவாகும் என அறிவிக்கப்படுகிறது.

# குருஷ்சேவினல் கம்யூனிஸ நாடுகளுக்கு ஆபத்தாம்!

## ரஷ்யப் பிரதமர் மீது சீனவின் நேரடித் தாக்குதல்

புடாபெஸ்ட், மார்ச் 31

சோவியத் பிரதமர் திரு. குருஷ்சேவும், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் சில முக்கிய தலைவர்களும் இன்று புடாபெஸ்ட் வந்து சேர்ந்தனர்.

சோவியத் பிரதமரின் ஹங்கேரி விஜயத்தையொட்டி, சீன கம்யூனிஸ்ட் கட்சி, பிரதமர் குருஷ்சேவின் கொள்கைகளை நேர்முகமாக வன்மையாகத் தாக்கியுள்ளது. பிரதமர் குருஷ்சேவ் ஒரு பெரிய முதலாளித்துவவாதி என்று தெரிவித்துள்ளது.

"கம்யூனிஸ கொள்கைகளை சரியான முறையில் கடைப்பிடிக்காத திரு. குருஷ்சேவ்; கம்யூனிஸ கொள்கைகளில் பெரும் மாறுதல்களை ஏற்படுத்தி வருகின்ருர் என்றும் இது கம்யூனிஸ நாடுகளுக்கே பெருந் தீங்கை விளைவித்துள்ளதென்றும் சீன தெரிவித்துள்ளது.

பிரதமர் குருஷ்சேவையும் அவரது கொள்கைகளையும் இதற்கு முன்னர் சீன இவ்வளவு மோசமான முறையில் நேரடியாகத் தாக்கவில்லையென்று மாஸ்கோவிலுள்ள ரஷ்ய கம்யூனிஸ வட்டாரங்கள் அபிபபிராயம் தெரிவிக்கின்றன.

தற்பொழுது ஹங்கேரிக்கு விஜயம் செய்துள்ள சோவியத் பிரதமர், கடைசியாக 1959-ம் ஆண்டில் இங்கு விஜயம் செய்திருந்தார்.

## மாஜி மந்திரி தோல்வி

பத்தேகம, செவ்வாய்

பத்தேகம கிராம சபைக்கு நடைபெற்ற தேர்தலில் முன்னள் பத்தேகம எம். பி.யும் பண்டாரநாயகா அரசாங்கத்தில் போக்கு வரத்து மந்திரியாக இருந்தவருமான திரு. ஹென்றி அபயவிக்கிரமா தோல்வியடைந்தார்.

## கார் மோதி இருவர் காயம்

காங்கேசன் துறை, செவ்.

மயிலிட்டியைச் சேர்ந்த கார் ஒன்று பருத்தித்துறையிலிருந்து மயிலிட்டியை நோக்கி வந்துகொண்டிருந்தபோது பலாலிச் சந்திக்கருகாமையில் ஒரு திருமண வீட்டுக்கு முன்னல் நின்றுகொண்டிருந்த இருவர் மீது மோதியதால் இந்த இருவரும் பலத்த காயத்துக்குள்ளானர்கள்.

திருமண வீட்டுக்கு முன் நின்று கொண்டிருந்த இந்த இருவரும் காருக்கு முன்னுள் வந்த ஜீப் வண்டிக்கு வழிவிட்டு ஒரு புறமாகச் சென்ற சமயத்திலேயே இவ்விபத்து நடம்பெற்றதாக அறியப்படுகிறது.

காயமடைந்த இருவருள் ஒருவர் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மற்றவர் காங்கேசன் துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து அங்கு நின்றவர்கள் கார்ச் சாரதியை தாக்க முற்பட்டதால் சாரதி காங்கேசன் துறை பொலிஸ் நிலையத்தில் சரண்புகுந்தார்.

## பெற்ருர்-ஆசிரியர் சங்கக் கூட்டம

கைதடி, செவ்

கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தியாசாலைப் பெற்ருர்-ஆசிரியர் சங்கப் பொதுக்கூட்டம் சென்ற புதன்கிழமை வித்தியாசாலை மண்டபத்தில் உபதலைவர் திரு. அ. சின்னையா தலைமையில் நடைபெற்றது.

பாடசாலைக்கு இரு வகுப்பறைகள் கட்டுவதற்கு அரசாங்கம் 7257/50 ரூபா மானியம் வழங்கியிருப்பதால் கல்விப்பகுதியாரின் கோரிக்கைக்கிணங்க இச்சங்கம் இவ்வேலையைப் பொறுப்பேற்று பூர்த்தி செய்யவேண்டுமென ஏகமனதாக முடிவுசெய்யப்பட்டது.

புதுவருட நிர்வாகிகள் வருமாறு: தலைவர்: திரு. சி. க. சுப்பிரமணியம், உபதலைவர்: திரு: அ. சின்னையா, காரியதரிசி: திரு. க. சதாசிவம், உபகாரியதரிசி: திரு- சி. சி. சுப்பையா, தனதிகாரி: திரு. வே. கதிர்காமு.

## சவூதி அரசாங்க பொறுப்பு

### இளவரசர் பைசல் ஏற்றுக்கொண்டார்

மக்கா, மார்ச் 31

சவூத் அரேபிய மன்னர் சவூத தமது பொறுப்புக்களை பட்டத்து இளவரசரான பைசலிடம் ஒப்படைத்துவிட்டார் என்று மக்கா வானொலி இன்று அறிவித்துள்ளது.

கடந்த சில காலமாக நோயுற்றிருக்கும் மன்னர் சவூத், தமது தேகநலன்களைக் கருதித்தான் பொறுப்புகளை இளவரசர் பைசலிடம் ஒப்படைத்ததாக அறிவிக்கப்படுகிறது. மன்னரின் பொறுப்புக்கள், இளவரசர் பைசலிடம் ஒப்படைக்கப்படுவது சம்பந்தமாக 58 இளவரசர்கள் கூடி ஆலோசனை நடத்தினர். இதன் பின்னரே இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது;

புதிய பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டதைத் தொடர்ந்து இளவரசர் பைலே நாட்டை ஆட்சி செலுத்துவார். அரசாங்கத்தின் சகல அதிகாரங்களும் இவரிடம் இருக்கும். மன்னர் சவூத் சுகயீன முற்றிருந்ததினுல் கடந்த இரண்டு வருட காலமும், இளவரசர் பைசல் தான் மன்னருக்கு உதவியாகவிருந்தார்.

## பிற்போக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ராக இருக்கிறது.'

**சமரக்கொடியின் ஆட்சேபம்**

லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த 'தீவிர கோஷ்டித்' தலைவரான திரு. எட்மண்ட் சமரக்கொடி இடதுசாரி ஐக்கிய முன்னணியின் இக்கமிட்டி உத்தியோகபூர்வமற்றது என்றும் இடதுசாரி ஐக்கியமுன்னணியைச் சேர்ந்த கட்சிகள் நிறைவேற்றவேண்டுமென வற்புறுத்தக்கூடிய வகையில் தீர்மானங்கள் நிறைவேற்ற அதற்கு அதிகாரமில்லையென்றும் தெரிவித்துள்ளார்.

## நான்கு மணித்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

8 மணிமுதல் 12 மணிவரை. மாலை 3 மணி முதல் 5 மணிவரை மயக்கமடைந்தவரைப் பற்றி எனக்கு ஏற்கனவே தெரிவிககப்படவில்லை. யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் 15 டாக்டர்கள் கடமையாற்றுகிருர்கள். மயக்கமடைந்தவரை 3 மணிக்கு டாகடர் ஆனந்தராசாவும் பரிசோதனை செய்தார்.

எதிரிகளின் வழக்கறிஞர் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் குறுக்கு விசாரணை செய்தபோது காயமடைந்த வயிரமுத்து கூறியதாவது:-

படமாளிகையிலிருந்து ஜனக்கூட்டம் வெளிவந்தது. கீழ்கோர்ட்டில் 4 எதிரிகளும் சயிக்கிளில் போனதை முதல் தடவையாக கண்டதாக கூறியது எனக்கு ஞாபகமில்லை. அப்படி கூறியிருந்தால் அது சரியில்லை. வேறு ஆட்களும் சயிக்கிளில் போனர்கள், பலர் நடந்தும் போனர்கள்.

நீதியரசர்: பொலிஸுக்கு கொடுத்த வாக்கு மூலமும் இங்கு கூறுவதும் முரண்பாடாக இருக்கின்றது.

சாட்சி: இங்கு கூறுவது முழுவதும் உண்மை பொலிஸ் வாக்குமூலம் உண்மையாகவிருந்தால் இங்கு கூறுவது உண்மையல்ல. இங்கு கூறுவது உண்மையாகவிருந்தால் பொலிஸ் வாக்கு மூலம் உண்மையல்ல.

மேல் விசாரணை இன்று காலை 9-45 மணிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணத்தில் கந்தளாய் சீனி

நல்லூர், புதன்

யாழ்ப்பாணத்திலுள்ள பொதுமக்களின் பாவனைக்கு கந்தளாயில் தயாரிக்கப்படும் சீனி விநியோகிக்கப்படுகிறது. கடந்த வாரம் முதற்கொண்டு கந்தளாயில் தயாரிக்கப்படும் பழுப்புச் சீனி பொதுமக்கள் பாவனைக்காக இங்கு அனுப்பப்படுகிறது.

இதுவரை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதிசெய்யப்படும் வெள்ளைச் சீனியே இப்பகுதி மக்களின் பாவனைக்கு அனுப்பப்பட்டு வந்ததாயினும் இனிமேல் இப்பகுதி மக்களுக்கு பழுப்புச் சீனியே பாவனைக்குக் கிடைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

தற்போது விநியோகிக்கப்படும் கந்தளாய் பழுப்புச் சீனியை 66 சதமாகப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. வெள்ளைச் சீனி 70 சதமாக விற்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மாகாணத்திற்கும் கந்தளாய்ச் சீனியே விநியோகிக்கவிருப்பதாகத் தெரிகிறது.

## பிரதேச சபைகள்

### சிறுபான்மைத் தமிழர் கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன்

பிரதேச சபைகள் நிறுவப்படும்போது சிறுபான்மைத் தமிழருக்கும் தகுந்த இடமளிக்க வேண்டுமென மக்கள் முன்னேற்ற மன்றம் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்திடம் தெரிவித்துள்ளது.

பிரதேச சபைகள் அமைக்கப்படும்போது சிறுபான்மைத் தமிழரைப் பாதிக்காதவகையிலும் அங்கத்துவத்தைப் பொறுத்தமட்டிலும் அவர்களுக்கு நியாயமான அளவு இருக்கக்கூடியதாகப் பார்த்துக்கொள்ளவேண்டும் எனவும் திரு செல்வநாயகத்தைச் சந்தித்த மக்கள் முன்னேற்ற மன்றத்தினர் கேட்டுக்கொண்டனர்.

சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு இருக்கும் நிலப்பிரச்சினை, பாடசாலைகளில் தீண்டாமை போன்ற பல விஷயங்கள் பற்றியும் மன்றத்தினர் சுட்டிக்காட்டினர். சிறுபான்மைத் தமிழர் முன்னேற்ற மன்றத்திற்கான உதவிகளைச் செய்வதாக திரு. செல்வநாயகம் கூறினர்.

## எவருக்கும் வெற்றியில்லை

உடுப்பிட்டி, செவ்.

நெல்லியடி அரசினர் மத்திய மகாவித்தியாலயத்திற்கும் மட்டுவில் மத்திய மகா வித்தியாலயத்திற்குமிடையில் நெல்லியடி அ. ம. ம. வித்தியாலய மைதானத்தில் கடந்த சனிக்கிழமை கிரிக்கெட் போட்டி நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டுவில் மத்திய மகா வித்தியாலயக் கோஷ்டியினர் தமது முதலாவது இன்னிங்சில் 110 ரன்களும் நெ. அ. ம. ம. வித்தியாலயக் கோஷ்டி 165 ரன்களும் பெற்றன. இவ்வாட்டத்தில் நெ. அ. ம. ம. வித்தியாலயக் கோஷ்டியைச் சேர்ந்த எஸ். பொன்னுத்துரை என்னும் துடுப்படி வீரர் 40 ரன்களைப் பெற்றுக் கொடுத்தார்.

இரண்டாவது இன்னிங்சில் மட்டுவில் மத்திய மகா வித்தியாலயம் தனது 7 விக்கெட்டுகள் நஷ்டத்திற்கு 60 ரன்களைப் பெற்றது.

இதனல் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.


# புதிய மில்க்வைற் நீல சோப்

சீர் திருத்தப்பட்ட தரத்திலும்

புதிய அழகிய மேலுறையுடனும்

**1-4-64 தொடக்கம் வெளிவருகின்றது!**

மில்க்வைற் நீல சோப்பின் அதிகப்படியான நுரை உங்கள் ஆடைகளின் நூல் இடைகளில் ஊடுருவிப் பாய்ந்து அழுக்குகளை அகற்றி வெண்மைக்கு மேலும் பிரகாசத்தை கொடுக்கின்றது

சிக்கனமாகவும் குறைந்த செலவிலும்

அதிக துணிகளை வெளுக்கலாம்

இன்றே புதிய சீர்திருத்தப்பட்ட

## மில்க்வைற் நீல சோப்

வாங்கி உபயோகித்து அதிக லாபம் அடையுங்கள்

நீல சோப் வாங்கும்போது

மில்க்வைற் நீல சோப் என்று கேட்டு வாங்குங்கள்..


இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.